பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 10 புதன்கிழமை 25.12.2024 கதிர் 048

### இனி இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழ்க் கட்சிகள் மேலும் சீரழிந்து சின்னாபின்னமாகத் தொடங்கியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் ☞2

## தமிழர் இனப்படுகொலையை ஏற்ற கனடாவுக்கு நன்றிகூறிய சிறீதரன்

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் எனத் தொடர்ந்து கூறி, அதற்கான நீதியையும் கோரிவரும் கனேடிய ஆரசுக்கு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் தனது நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின்பேரில் கடந்த வாரம் அந்நாட்டுக்குச் சென்றிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுத் தலைவருமான சிவஞானம் சிறிதரன், கடந்த வார இறுதியில் கனடாவின் முடிக்குரிய பூர்வீகக்குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போதே இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான்என்றும், இறுதிப்போரின்போது கொல்லப்பட்டோர்மற்றும்மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கவேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி தமக்கான ஆதரவை வெளிப்படுத்திவரும் கனடாவுக்கு சிறிதரன் ☞7

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து

## அரசியல்வாதிகள் நிதி உதவி பெற்றது முறையற்ற செயல்

### எஸ்.பி.திசநாயக்க கருத்து

அரசியல்அதிகாரத்தைபயன்படுத்தி அரசியல்வாதிகள்ஜனாதிபதிநிதியத்தில் இருந்து கோடிக்கணக்கில் நிதி பெற்றுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும். முறையான விசாரணைகளை மேற்கொண்டு நிதியைமீளப்பெறுவதற்குஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது,

2005 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றுக் கொண்டபவர்களின் பெயர் ☞7

## கிறிஸ்து பிறந்தார்



யாழ். மறைமாவட்டத்திற்கான பிரதான நத்தார் நள்ளிரவுத் திருப்பலி புனித மரியன்னை தேவாலயத்தில் ☞7

## ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடா? விசாரணையைத் தொடங்க முடிவு

**ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாஎன்பதுதொடர்பில் விசேட விசாரணையைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.**

**இந்த விசாரணையைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பதில்பொலிஸ் மாஅதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

**ஜனாதிபதிநிதியத்தைமுறைகேடாகப் பயன்படுத்தியவர்கள் தொடர்பில் விசாரணையைமுன்னெடுக்குமாறுகோரி பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.**

**மக்கள்நிதியைப்பாதுகாப்பதற்கான சட்டத்தரணிகள் அமைப்பினால் இந்த முறைப்பாடுமேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக வீரசூரிய தெரிவித்தார்.**

## ஜனாதிபதி அநுர நத்தார் வாழ்த்து

சகல மக்களும் நாட்டின் எதிர்காலத் திற்காக ஒன்றிணைந்துள்ளோம். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன்ஆட்சிசெய்யும்தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றமடைகிறது. சுதந்திரம் ☞2

## எதிர்க் கட்சித் தலைவர் கிறிஸ்மஸ் வாழ்த்து

இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் மகிழ்ச்சியான இனிய நத்தார் வாழ்த்துக்களை மனமார வாழ்த்துகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது வாழ்த்துச் செய்தியை தெரிவித்துள்ளார். ☞7

## இன, மத அடிப்படையில் இல்லையாம் 'தூய சிறீலங்கா' ஜனாதிபதி செயலணி

'தூய சிறீலங்கா' ஜனாதிபதி செயலணியில் மதம் அல்லது இனங்களுக்கு முக்கியத்துமளிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இந்தக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. எனவே இந்த வேலைத்திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும் என்று அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

'தூய சிறீலங்கா' வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 18 பேரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படைகள் உள்ளிட்டோர் அக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் இக்குழுவின் சில வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகும்.

ஓரிரு மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மாத்திரமின்றி ஜனாதிபதியின் கண்காணிப்பின் கீழ் ☞7



## மகிந்த, நாமல் பாதுகாப்பு பழிவாங்கவே குறைப்பு

### பொது ஜன பெரமுன குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வு பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் வழங்கப்பட்டுள்ள தரைப் படையினரின் பாதுகாப்பு அரசியல் பழிவாங்களுக் காகவே நீக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வழங்குவது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் கட்சியின் கொழும்பு பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ☞7

## அரச பணியாளர்களுக்கு 2025இல் சம்பள உயர்வு

அடுத்த வருடம் அரச ஊழியர்களின் சம்பளம் நிச்சயமாக அதிகரிக்கப்படும் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான பேராசிரியர்அனில்ஜயந்ததெரிவித்துள்ளார்.

"இப்போது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து உள்ளது. இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்று நாம் கேட்கலாம். 2026இல் செய்வோம் என்ற வாதத்தைக்கூட முன்வைக்கலாம். ஆனால் நாங்கள் செய்யவில்லை. மக்கள் படும் துன்பங்கள் எங்களுக்குத் தெரியும். சம்பள உயர்வை நிச்சயம் எதிர்பார்க்கலாம். அந்த விவரங்களை வரவு செலவுத் திட்டத்தில் தாக்கல் செய்வேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கடன்மறுசீரமைப்பில் திருத்தம் செய்வதாகக் கூறி ஏமாற்றினர்

### ஆளும்தரப்பு மீது ஹர்ஷ எம்.பி சாடல்

'மூடீஸ்' தரப்படுத்தலில் இலங்கை முன்னேற்றமடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. ஆனால் கடந்த ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பிரதிபலனாகவே இந்த வெற்றி கிடைத்துள்ளது. கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாக பொய் கூறி ஏமாற்றியிருக்கின்றனர் என்பதை இப்போதாவது தேசிய மக்கள் சக்தியினர் உணர்ந்திருப்பார் ☞7

## 'எட்கா' குறித்த பேச்சுக்கள் வெளிப்படையாக நடக்கும்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

சர்வதேசத்துடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு வர்த்தக, பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பிலும் நாட்டின் தேவையை முன்னிலைப்படுத்தியே தீர்மானங்கள்எடுக்கப்படும். மக்களின் ☞2

## இனி இது .....

புகட்டிய பாடத்தை தமிழ் அரசியலாளர்கள் புரிந்துகொண்டார்கள்போன்றுதெரியவில்லை. ஒரு பக்கம் தமிழ் அரசுக் கட்சி புதிய வழக்குகளை எதிர்கொள்கிறது. மறுபக்கத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனது சிதைவை அண்மித்துக்கொண்டிருக்கின்றது. உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்குமுன்பாகபுதிய கூட்டணிக்கும் வாய்ப்புத் தேடப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் படுதோல்விக்குப் பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டத்தை டிசெம்பர் 28 வவுனியாவில் கூட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. அந்த நாளில் கூட்டத்தைக் கூட்ட தமிழ்த் தேசியக் கட்சி இன்னும் இணக்கம் தரவில்லை. ஒருவேளை அந்தக் கூட்டம் நடந்தால் தற்போதுள்ள வடிவத்தில் ஜனநாயகக் கூட்டணியின் கடைசிக் கூட்டமாக அதுதான் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது, தற்போது ஜனநாயகக் கூட்டணியில் புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்று 5 கட்சிகள் உள்ளன. இந்தக் கூட்டணியைக் கைவிட்டு தமிழ் அரசுக் கட்சியிடம் சரணடைய ரெலோ ஏற்கனவே முடிவெடுத்துள்ளது. அதன் தலைமைக் குழு கூடி இந்த முடிவை எடுத்தது. அதேநேரம், தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி செய்யும் திட்டம் சரிவரவில்லை என்றால் ஜனநாயகக் கூட்டணிக்குள் சிறீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சியையும் ஜனநாயகப் போராளிகள் கட்சியையும் மக்கள் செல்வாக்கற்ற கட்சிகள் என்ற வகையில் தாழ்த்தி, ஒதுக்கிவிட்டு ஜனநாயகத் தமிழ்த் அரசுக் கூட்டமைப்பையும் மணிவண்ணன் தரப்பையும் சேர்த்துக் கொள்வதற்கும் ரெலோ காய் நகர்த்தியது. இது தொடர்பான இரகசியப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன. மணிவண்ணன் தரப்புடனும் ஊடக முதலாளி ஒருவருடனும் இது தொடர்பான சந்திப்புக்கள் நடந்தன.

இதற்குப் பதிலடியாக ரெலோவையும் மணிவண்ணன் தரப்பையும் தவிர்த்துவிட்டு தேவைப்பட்டால் ஈபிஆர்எல்எவ் தரப்பையும் தவிர்த்துவிட்டு ஒரு தேர்தல் கூட்டை உருவாக்குவதற்கான காய் நகர்த்தல்களை சிறீகாந்தார தரப்பினர் செய்யத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்திவிட்டு பின்கதவு அரசியல் செய்து ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்-டுச் சேர்ந்தவர்களுடனும் புலம்பெயர் தமிழ் பெரு முதலாளி ஒருவரிடம் இருந்து, அவர்களுக்கும் அவர்களின் அரசியல் கட்சிக்கும் ஆதரவாகச் செயற்படுவோம் என்று உடன்படிக்கையில் கையெழுத்திட்டுப் பணம் பெற்றுக்கொண்டவர்களுடனும் 'டீல்' அரசியல்வாதிகளுடனும் இனி வரும் காலங்களில் சமதையாக அமர்ந்து பேசமுடியாது, செய்தியாளர்களைச் சந்திக்க முடியாது என்ற வாதத்தை தீர்க்கமாக முன்னெடுக்கத்தீர்மானித்திருக்கும்சிறீகாந்தா, சனிக்கிழமை கூட்டத்திற்குச் சென்றால் இதனை நிச்சயம் இதனை வலியுறுத்துவார் என்று தெரிகிறது.

இதனால் கூட்டணிக்குள் பிரச்சினை பெரியதாக வெடிக்கும் சாத்தியமுள்ளது. ஒரு கூட்டணிக்குள் இருந்துகொண்டு அந்தக் கூட்டணியின் முதுகில் குத்தி மற்றொரு கட்சிக்கு ஆதரவாக இருப்பதாக ஒப்பந்தத்தில் கையெழுத்துடுவதும் பணத்தை வாங்கிக்கொண்டு ஆதரவு தெரிவிப்பதுமே பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கூட்டணியின் படுதோல்விக்குக் காரணமாக இருந்தது என்று முகத்திலடித்த மாதிரி கருத்துக்கள் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தொடர்வதாக இருந்தால் இந்தப் பின்கதவு அரசியல்வாதிகள் கூட்டணியில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் இல்லையேல் கூட்டணியைவிட்டு நாம் வெளியே போகின்றோம் என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவதற்கும் தரப்புக்கள் தயாராக உள்ளன. இப்படி இந்த விவாதங்களால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உடைந்தால் தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், அருந்தவபாலன், ஜனநாயகப் போராளிகள் தரப்பு ஆகியவற்றுடன் புளொட் வந்தால் அதனையும் சேர்த்துக்கொண்டு 'பின்கதவு அரசியல்வாதிகள்' இல்லாத புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

டிசெம்பர் 28 தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் மத்திய குழுவை முடக்கி கட்சியைச் செயலிழக்கவைப்பதற்கான முயற்சி இன்னும் கைகூடாத நிலையில், இந்த மத்திய குழுக் கூட்டத்தில் மாவையின் கட்சித் தலைவர் பதவியின் தலைவிதி தீர்மானிக்கப்படவுள்ளது. மொத்தத்தில் அடுத்தடுத்த தேர்தல்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவிதியையும் எதிர்காலத்தையும் தீர்க்கமாகத் தீர்மானிப்பவையாக இருக்கப் போகின்றன என்பது நிச்சயமாகத் தெரிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நீதியின் அடிப்படையில் இயேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஒரு ஆளும்தரப்பென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். வளமான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாழ்த்துச்செய்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச்செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கோலகலமாக கொண்டாடிவருகின்றனர். துன்பத்தில் இருந்து அனைவரையும் காப்பாற்ற இவ்வுலகின் அவதரித்த இயேசு கிறிஸ்து ஒருபோதும் ஏழை பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. அதனால்தான் அன்னார் கடவுளின் குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாளில் மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பர்களிடையே பிறக்கத் தேர்ந்தெடுத்தார்.

இவ்வாறாகத் தான் தேவதூதர்கள் அவர்களுக்கு நற்செய்தியை கொண்டு வந்தார்கள். எனவே, நத்தார் தினத்தில் அடிப்படை அர்த்தம், வர்க்க, பேதங்களை ஒதுக்கி மனிதநேயத்தின் பெயரால் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் செயற்படுவதாகும். நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தமான, அமைதியின் பின்னணியில் இருந்து இந்த நத்தார் பண்டிகையை கொண்டாடிவருவதை உளப்பூர்வமான மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிடுகிறோம்.

சகல மக்களும் ஒன்றாக ஒரே நோக்கத்துடன் கூட்டுப் பொறுப்பாகக் கருதி நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்த ஒரு காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம். அமைதி மற்றும் நல்லிணக்கத்தினால் பிணைந்து பூமியில் ஒரு புதிய விடியலின் அரவணைப்பை நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

அந்த பிரகாசமே இயேசு நமக்குக் கொண்டுவந்த அன்பின் விடியலாகும். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் இயேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஒரு அரசாங்கமென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பெரும் தேவையாகும். சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும்.

அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் நமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் 'வளமான நாடு -அழகான வாழ்க்கையை' உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன், மென்மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் என்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார்தினத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சுயநலம் மற்றும் தீங்கான போட்டியை சமூக கட்டமைப்பு தள்ளப்பட்டுள்ள போதும் கிறிஸ்மஸில் வெளிப்படுத்தப்படும் மனித பண்புகளை வளர்த்து, சமத்துவத்தை மதித்து, மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், சகோதரத்துவத்தையும் சகவாழ்வையும் மதிப்பதன் மூலம், அந்த சமூக கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காக பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம்.

வலுவான மற்றும் நிலையான பொருளாதாரம், சமூக நீதியை இலக்காகக் கொண்ட உண்மையான உண்மையான அரசியல் கலாச்சாரம் மற்றும் மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்க வலுவான உறுதியுடன் நம்மை அர்ப்பணிக்க இந்தப் புனித நத்தார் தினத்தில் நாம் அனைவரும் உறுதி பூணுவோம். இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்.

# சீன மருத்துவமனை கப்பலை நேற்று நேரில் பார்த்த பிரதமர்

சீன அரசின் அமைதி நடவடிக்கை (Mision Harmony) -2024 திட்டத்தின் ஒரு பகுதியாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த சீன கடற்படைக்குச் சொந்தமான 'பீஸ் ஆர்க்' என்ற மருத்துவமனைக் கப்பலை பிரதமர் கலாநிதி ஹரிணி நேற்று நேரில் பார்வையிட்டார்.

'பீஸ் ஆர்க்' என்ற இந்த கப்பல் டிசெம்பர் 21 கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. 2024 டிசம்பர் 27 வரை இலங்கை மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனைகளை வழங்குகிறது.

இந்த சமாதானக் கப்பல் திட்டத்தின் மனிதாபிமான முயற்சிகளைப் பாராட்டிய பிரதமர், இலங்கை மக்களுக்கு இந்த நல்லெண்ணத்தைவெளிப்படுத்தியதற்காகசீன அரசுக்குப் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளைப் பேணுவதற்கும் பொது சுகாதாரத் துறைக்கு ஆதரவளிப்பதற்கும் இத்தகைய முயற்சிகளின் முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும்சீனாவுக்கும்இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் இந்த கப்பலின் பணியின் முக்கியத்துவத்தை சீனத் தூதுவர் வலியுறுத்தினார். கப்பலில் உள்ள நவீன வசதிகள் மற்றும் சேவைகள் குறித்து கப்பலின் மருத்துவக் குழுவினர் விளக்கமளித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, கொமடோர் மேஜர் ஜெனரல் ஹீ யோங்மிங், கொமடோர் மேஜர் ஜெனரல் யிங் ஹொங்போ, கப்டன் டெங் கியாங் மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர்.

# இலங்கை – இந்திய புரிந்துணர்வுக்கு அமைச்சரவை திங்களன்று அனுமதி

பல்துறைசார் நன்கொடை உதவிகளை நடைமுறைப்படுத்த இந்தியா மற்றும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் 33 திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சமூக - பொருளாதார அபிவிருத்தி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்துவதற்காக இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த சட்டகமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தச் சட்டகத்திற்கமைய, இந்திய அரசால் வழங்கப்படுகின்ற 2,371.83 மில்லியன் இலங்கை ரூபாய்கள் நன்கொடை உதவிகளின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலாத்துறை மற்றும் சமூக வலுவூட்டல் போன்ற துறைகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய, உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்த சட்டகத்தில் இருதரப்புக்கிடையில் கையொப்பமிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# 101 சூட்டுச் சம்பவங்கள் 2024இல் மட்டும் பதிவு

## இவற்றில் 60 பேர் உயிரிழப்பு

2024ஆம் ஆண்டு இதுவரை 101 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதில் 60 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 44 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மீண்டும் தலைதூக்கும் பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

"பாதாள உலகத்தையும் போதைப்பொருள் கடத்தலையும் எதிர்த்துப் போராடுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். ஆனால் 'ஷோ' நடத்தி வாராந்திர நடவடிக்கைகள் இரண்டுவார நடவடிக்கைகள் செய்யப்போவதில்லை. இதில் பாதுகாப்பு படையினர் படிப்படியாக தலையிட்டு வருகின்றனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று மட்டும்தான் சொல்ல முடியும். அதன் முடிவுகளை பார்க்க முடியும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எட்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிலாஷைகளுக்கு முன்னுரிமையளித்து வெளிப்படைதன்மையுடன் 'எட்கா' ஒப்பந்தம் குறித்த பேச்சு முன்னெடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.


அவர் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு வர்த்தக, பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பிலும் நாட்டின் தேவையை முன்னிலைப்படுத்தியே தீர்மானங்கள் எடுக்கப்படும். அவ்வாறு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சட்டவாட்சி பலம் பெற்றால்தான் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

## சிறிநேசன் எம்.பி. இடித்துரைப்பு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கதலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சட்டவாட்சியைப் பலப்படுத்தப் போவதாகக் கூறியுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையின் போது இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருந்தது.

அக்கருத்தின்படி சட்டவாட்சி பலமடைந்தால், பாரிய குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என இலங்கத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டடுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்நாட்டில் நடைபெற்ற யுத்த காலத்தின்போது பல தலைவர்கள், புத்தியாளர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், போராளிகள், பொதுமக்கள் பலர் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர்.

அதனைச் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் உள்ளதோடு மட்டுமல்லாமல், கௌரவர்களாக உலாவி வருகின்றனர். அவர்களில் பலர் அதிகார சக்திகளால் பாதுகாக்கப்பட்டும் வருகின்றனர்.

சட்டவாட்சி வலுப்பெற்றால், இத்தகைய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது உறுதியாகும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களான யோசப் பரராசசிங்கம், ரவிராஜ், சந்திரநேரு, சிவநேசன் ஆகிய தலைவர்கள் பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மேலும், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரும் பேராசிரியருமானரவீந்திரநாத் தலைநகரில் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டதாக அறிய முடிகின்றது.

சிரேட்ட விரிவுரையாளர் தம்பையா அவர்கள் அவரது வீட்டில் இருக்கும் போது பகலில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். பிறேமினி தனுஸ்கோடி, சதிஸ்கரன் உட்பட தமிழர் புனர்வாழ்வுக் கழக உத்தியோகத்தர்கள் சிலர் கடத்தப்பட்டுபொலன்னறுவை தீவுச்சேனையில் கொல்லப்பட்டனர் என அறியப்படுகிது.

மேலும் திருமலை விக்கினேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். சிவராம், நடேசன், லசந்த விக்கிரமதுங்க, எக்னலிகொட, நிமலராஜன் போன்ற 40 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் 2006 தொடக்கம்2015இற்குஇடைப்பட்ட காலத்தில் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர்.

தேற்றாத்தீவில் பொறியியலாளர்திருமதிலோகேஸ்வரன் என்ற பெண்மணியான ஒரு பச்சைக் குழந்தையின் தாய் பெற்றோரின் கண்களுக்கு முன்னால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பலநூற்றுக்கணக்கான அப்பாவி பக்தர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இச்சம்பவங்களுடன் தொடர்பான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

இதனால் நாட்டின் மனிதவுரிமைகள் சட்டவாட்சி ஜனநாயகம் போன்ற விடயங்கள் கேவலபடுத்தப்பட்டன. இவற்றுக்கெல்லாம் உரிய பரிகாரம் தேவையென்றால், சட்டவாட்சி பலப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு முறையாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் நாட்டின் கௌரவத்தை மீண்டும். கட்டியெழுப்ப முடியும். இதனைஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தியும் செய்தால், வரவேற்புக் கிடைக்கும். இல்லையேல் முந்திய அரசாங்கங்கள் போன்றதாக இந்த அரசாங்களும் அமைந்து விடும். என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே நாளில் திரும்பப் பெறப்பட்டது மேல்மாகாண ஆளுநரின் உத்தரவு

## தனியான கல்வி வகுப்புகளுக்கு தடை:

மேல் மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்குதனியார் கல்வி வகுப்புகளை மட்டுப்படுத்தி மாகாண கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேல்மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய சுற்றுநிருபத்தை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் மாணவர்களுக்கான கல்வி வகுப்புகளை நடத்துவதற்கு தடைவிதித்து கடந்த வெள்ளிக்கிழமை மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

சுற்றுநிருபத்துக்கு ஆட்சேபனைகள் எழுந்ததையடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாவிகளால் வறிய குடும்பங்களுக்கு அரிசி

ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஊடாக காலி உனவட்டுன பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் 50இற்கும்மேற்பட்ட வறியகுடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி நேற்று (செவ்வாய்க்கிழமை) இலவசமாக அரிசி பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



இதனைஏற்பாடுசெய்தகாலிஉனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த நிஹால் ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுடன் அரிசிபொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.



# சாய்ந்தமருதுக் கடைகளில் திடீர் சுகாதாரச்சோதனை



சாய்ந்த மருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் உணவுப்பண்டங்கள்விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் களப் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் இந்த திடீர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது போது முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் மூன்று நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதுடன் டெங்கு பரவும் வகையில் சுற்றுச் சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திடீர் களப் பரிசோதனையின் போது மூன்று உணவகங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள்மற்றும்பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், ஆரோக்கியத்தைக் கவனத்தில் கொண்டும் எங்கள் பணி என்றும் தொடரும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே.மதன் தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொறுப்பற்ற தனமான பதில்

'தூய சிறீலங்கா' ஜனாதிபதி செயலணியில் மதம் அல்லது இனங்களுக்குமுக்கியத்துமளிப்பதற்குநாம்எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இந்தக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. எனவே இந்த வேலைத்திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பொறுப்பற்றதனமாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தச்செயலணியில்தமிழ், முஸ்லிம்மக்களின்பிரதிநிதிகள் எவரும் இணைக்கப்படவில்லை என்று எதிர்க் கட்சி எழுப்பிய குற்றச்சாட்டுக்கே அவர் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

இதற்கும் ஒருபடி மேலே சென்று நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவரை நியமிக்காத ஐக்கய மக்கள் சக்தி ஆளும்தரப்பு மீது விரல் சுட்டிப் பேசும் தகுதியே இல்லாதது என்றும் மிக மோசமான கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

'தூய சிறீலங்கா' வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 18 பேரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படைகள் உள்ளிட்டோர் அக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் இக்குழுவின் சில வேலைத்திட்டங்கள் தொடங்கும்.

ஓரிருமாதங்களுக்குஅல்லதுஒருவருடத்துக்குமாத்திரமின்றி ஜனாதிபதியின்கண்காணிப்பின்கீழ்நீண்டகாலவேலைத்திட்டமாக இதனை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

'தூய சிறீலங்கா' என்ற வேலைத் திட்டம் அனைத்து இலங்கையர்களுக்குமானது. எனவே இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மதம் அல்லது இனங்களுக்கு முக்கியத்துமளிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இதற்கான குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. எனவே இந்த வேலைத்திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும். எனவே இந்த விடயத்தில் எதற்காக இனம் மற்றும் மதத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலைப்படுத்துகிறது என்பது எமக்கு தெரியாது.

நாடாளுமன்றத்தில் பிரதம கொறடாவாக சிறுபான்மை இனத்தவர் ஒருவரது பெயரை பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு ஆளும்தரப்பு மீது இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியும்? அக்கட்சிக்கு இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க தகுதியில்லை" என்றார் அமைச்சர்.

அவரது கருத்துக்களின் வெளிப்பாடு, இந்த ஆளும் தரப்பும் தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்பில் நீதி நியாயமாக, நேர்மையோடு நடந்துகொள்ளப் போவதில்லை என்பதையே உணர்த்துகின்றது. அனைத்து இலங்கையர்களளுக்குமானது என்பதால் இன, மத ரீதியில் நியமனங்கள் செய்யப்படவில்லை என்று கூறும் ஆளும் தரப்பு ஏதாவது ஒரு விடயத்தில் அனைத்து இலங்கையர்களுக்குமானது என்பதால் இன மதம் பார்க்காமல் அனைவரையும் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளாகக் கொண்ட ஏதாவது ஒரு குழுவை நியமிக்குமா? அதற்கான தற்றுணிபு உண்டா? சிங்களவர் ஒருவர்கூட இல்லாமல் எப்படி ஏதாவது ஒரு குழுவை இங்கு நியமிக்க முடியாது என்பது யதார்த்தமோ அதுபோன்றே இலங்கையின் பன்மைத்துவத்தையும் பல்லினத்துவத்தையும் பிரதிபலிக்கும் வகையில் ஆளும் தரப்பின் நடவடிக்கைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதும் அவசியம்.

அதுவும்போக 'தூய சிறீலங்கா' செயலணியில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநித்துவம் இல்லை என்பது ஐக்கி யமக்கள் சக்தியின் கருத்து அல்ல. அது தமிழ், முஸ்லிம் மக்களின் கருத்து. தாமும் இணைந்து வாக்களித்த இந்த ஆளும் தரப்பும் தம்மைப் புறமொதுக்கி இரண்டாம் தரக் குடிமக்களாககடந்தஆட்சியாளர்களைப்போன்றேநடத்துகின்றது என்ற ஆதங்கப்படுவதன் வெளிப்பாடு. அப்படியிருக்கும்போது அதையொரு கட்சி அரசியலாக மலிமனப்படுத்தி அமைச்சர் கருத்துத்தெரிவித்திருப்பதுகண்டனத்துக்குரியது. இந்தப்போக்கு இலங்கையில் மாற்றத்திற்கோ வளர்ச்சிக்கோ வழிவகுக்காது. கடந்த காலங்களில் இத்தகைய அணுகு முறைகளே இன முரண்பாடுகளுக்கும் இனப் போருக்கும் வழிவகுத்தன என்பதையும் இந்த ஆளும்தரப்பு மறந்துவிடலாகாது.

# சமூகவலைதளங்கள் வரமா, சாபமா?

**இராதாகிருஷ்ணன்**

கல்வி என்ற ஒற்றை இழையைப் பற்றி முன்னேற வேண்டிய பதின்ம பருவத்தினர் இன்று தேனில் விழுந்த ஈயாக சமூகவலைதளங்களில் மூழ்கி மீள முடியாமல் தங்களது உயிரனைய நேரத்தை இழந்து வருகிறார்கள். அது மட்டுமன்றி, பல பிரச்சினைகளுக்கும் உள்ளாகி வருகிறார்கள்.

இன்றைய பதின்ம பருவத்தினர் மின்னணு சாதனங்கள், அறிதிறன்கைப்பேசி ஆகியவற்றின் மூலம் காணொலி விளையாட்டுகளை விளையாடுவது, சமூகவலைதளங்களைப் பயன்படுத்துவது போன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு செயலற்று வருகிறார்கள். இன்று தளிர் வயதினர் முதல் முதியோர்கள் வரை பலர் தங்கள் கைப்பேசிகளில் பல செயலிகளை நிறுவி ஒரு நாளில் 2 முதல் 6 மணி நேரம் வரை செலவிடுகின்றனர். உலக அளவில் 8 முதல் 12 வயதுடைய சிறார்களில் 40 சதவீத பேரும், 13 முதல் 17 வயதுடைய பதின்ம பருவத்தினர் 95 சதவீதப் பேரும் நாளும் சமூகவலைதளங்களை பயன்படுத்துவதாக அமெரிக்காவின் பொது சுகாதார சேவை ஆணையக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.



இளந்தளிர்களும், பதின்ம வயதினரும் அதிக நேரம் சமூகவலைதளங்களைப் பயன்படுத்துவதால் மனச்சோர்வு, பதற்றம், தூக்கமின்மை, நேரத்திற்கு உணவு உண்ணாமை, கோபம் போன்ற பிரச்னைகள் இரட்டிப்பாகும் என அக்குழு மேலும் தெரிவித்துள்ளது. மாறாக, இளம்வயதில்வளர வேண்டிய மாசுமறுவற்ற குணமும், இளகிய மனமும், மனஉறுதியும், தன்னம்பிக்கையும், பேச்சாற்றலும், நட்புறவும் மறைந்து விடும். மாறாக, தற்பெருமை, அகங்காரம், போட்டி, பொறாமை, பெற்றோர்களிடமும், உறவினர்களிடமும், நண்பர்களிடமும் ஒற்றுமையின்மையையும் தூண்டி இறுதியில் அவர்களை கொலைக்கும், தற்கொலைக்கும் ஊக்குவிக்கும் என்கின்றனர் மனநல நிபுணர்கள். கைப்பேசியை அதிகம் பயன்படுத்தும் குழந்தைகளின் பேசும் திறனும்குறையும்என்கின்றனர்மருத்துவர்கள்.

இந்நிலையில் உலகிலேயே முதன்முறையாக ஆஸ்திரேலியா அரசு பதினாறு வயதுக்குட்பட்ட சிறார்கள் முகநூல், படவரி (இன்ஸ்டாகிராம்), உள்ளிட்ட சமூகவலைதளங்களில் தங்கள் கணக்கைத் தொடங்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் முழுமையாகத் தடைவிதித்து சட்டம் இயற்றியுள்ளது. உலக அளவில் இது எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சமூகவலை தளங்களை சிறார்கள் பயன்படுத்த முனையும்போது, முன்னதாக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அவர்களின் வயதைக் கண்டறிந்து, அதன் பிறகே அவர்கள் கணக்கைத் தொடங்க அனுமதிக்கவும், அவர்கள் பதினாறு வயதிற்கும் குறைவாகயிருந்தால் அவர்களின் கணக்கை முடக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது.

இச்சட்டத்தின் நோக்கம், "சிறார்களுக்கு தண்டனை அளிக்க வேண்டும், அவர்களை தனிமைப்படுத்த வேண்டும்' என்பது அல்ல. மாறாக, அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக உயரவேண்டும் என்பதற்காகத்தான். குறிப்பாக, போதைப்பொருள்கள்பயன்பாடு, வன்முறையில் வயதுக்கு மீறிய செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முனைவது போன்றதீய செயல்களில் ஈடுபடத்தூண்டும் சமூகவலைத் தளங்களிலிருந்து காக்கவே இச்சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது" என்கிறார் அந்நாட்டின் தகவல் தொடர்பு அமைச்சர் மிச்செல் ரௌலேண்ட்.

இச்சட்டம், பெருவாரியான நாட்டு மக்களாலும், குறிப்பாகபெற்றோர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. எனினும், குழந்தைகள் உரிமை அமைப்புகளும், சில சமூகவலைதள நிறுவனங்களும் இச்சட்டத்திற்கு பெரும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. "சமூகவலைதளங்களை சிறார்கள்பயன்படுத்துவதைதடுப்பதன்மூலம் சிறார்கள் எவ்வாறு காப்பாற்றப்படுவார்கள்? அவர்களின் தன்னிலை மறைப்பு (பிரைவசி) எவ்வாறு பாதுகாக்கப்படும்?" என அவர்கள் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளனர். "இது ஆஸ்திரேலியமக்களின் இணையதளப் பயன்பாட்டைத் தடுக்க பின்பக்கக் கதவு வழியாக எடுக்கப்பட்ட முயற்சி" என்கிறார் 'எக்ஸ்' சமூகவலைதள நிர்வாகி எலன் மஸ்க்.

இந்தச் சட்டம் குறித்து பேசிய ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், "குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் சமூகப் பொறுப்பு சமூகவலைதள நிறுவனங்களுக்குஉள்ளது. சமூகவலைதளத்தில் மூழ்கி இருக்கும் குழந்தைகளின் எதிர்காலம் கருதி வருந்திக் கொண்டிருக்கும் என்னைப் போலவே உள்ள பெரும்பாலான பெற்றோர்களுக்கானது. ஆஸ்திரேலியாவில் வாழும் குடும்பங்களிலுள்ள சிறார்களின் நலன் காக்க அரசு எப்போதும் துணை நிற்கும் என்பதை இச்சட்டம் எடுத்துக் காட்டுகிறது" என்றார். இச்சட்டத்தை மீறும் சமூகவலைதள நிறுவனங்களுக்கு 3.25 கோடி டொலர்கள் வரை அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும், உலக மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் ஆங்கில வார்த்தையை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் அறிவித்துவருகிறது. நிகழாண்டுக்கான ஆங்கில வார்த்தையாக 'பிரையன் நாட்' என்ற ஆங்கில சொல்லை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. சமூகவலைதளங்களில் அதிக நேரம் செலவிட்டுப் பயனற்ற தகவல்களை உள்வாங்கும்போது, மனநிலை பாதிப்புக்குள்ளாவதையே இந்த சொல் குறிக்கிறது. கடந்த ஓராண்டில் 'பிரையன் நாட்' என்ற சொல்லின் பயன்பாடு, 200 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது.

ஒரு கருவியின் பயன் அதை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோமோ அதைப் பொறுத்துதான் அமைகிறது. முள்ளும் ரோஜாவும் ஒன்றாகத் தானே வளர்கின்றன. நாம்செடியிலிருந்துரோஜாவைமட்டும்தானே பறிக்கிறோம். அது போல பல மணி நேரம் சமூகவலைதளங்களில் செலவிடும் பதின்ம பருவத்தினர் வாழ்க்கை மேம்படுத்தக்கூடிய, வாழ்வியல் பயன்தரத்தக்க செய்திகளை, கருத்துகளை, நிகழ்வுகளைத் தக்க முறையில்பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

# அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ள கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் திங்கட்கிழமை காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இந்த இக்கலந்துரையாடலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ஏ.சி.எம்.றியாஸால் அனர்த்த முன்னாயத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அனர்த்த முகாமைத்துவ குழுக்களை திறமையாக செயற்பட வைத்தல் போன்ற அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த இக்கலந்துரையாடலில் காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி பிரிவு தலைமை பீட முகாமையாளர் ஏ.எம்.அச்சு முஹமட் , கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் நிபந்தனையை மீறியதால் கைது

பிணையில் விடுவிக்கப்பட்ட சலிந்து மல்ஷிக குணரத்ன எனும் பாணந்துறை 'குடு சலிந்து'வை மீண்டும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பாணந்துறை மேல் நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்துக்கு உத்தரவு பிறப்பித் துள்ளது.

பிணை நிபந்தனை மீறிய காரணத்தால் சந்தேகநபருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்த பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி, அவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு திங்கட்கிழமைகுற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவை பிறப்பித்தார்.

பயங்கரவாத செயல்கள் மற்றும் கொலைகள் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்த சலிந்து மல்ஷிக குணரத்ன எனும் பாணந்துறை 'குடு சலிந்து கடந்த 2023 மார்ச் 07 ஆம் திகதி மடகாஸ்கரில் கைது செய்யப்பட்டதுடன் 15 ஆம் திகதி இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். சுமார் 362 நாள்கள் சி.ஐ.டி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த குடு சலிந்து நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்தப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் கடந்த 20 ஆம் திகதி மீண்டும் பாணந்துறை மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

10 இலட்சம் ரூபா பெறுமதி யானமூன்றுசரீரப்பிணைகளிலும் அதற்கு மேலதிகமாக சந்தேக நபருக்கு கடுமையான பிணை நிபந்தனைகளும்வழங்கப்பட்டன.

அவர் ஒவ்வொரு மாதமும் வாரத்தில் இரண்டாவது அல்லது நான்காவது நாள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொது மக்கள் முறைப்பாட் டுப்பிரிவில் முன்னிலையாக வேண்டும் என்றும் அவ்வாறு முன்னிலையாகவில்லையாயின் அவரது பிணை இரத்து செய்யப்பட்டு இந்த வழக்கு முடிவடையும் வரை அவர் விளக்கமறியலில்வைக்கப்படுவார் எனவும் பிணை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே மொரட்டுவை நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட வழக்கொன்றில் ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் எனவும் நிபந்தனை விடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் நீதிமன்றத் தின் உத்தரவுக்கு அமைய குடு சலிந்து' ஞாயிற்றுக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையா கியிருக்க வேண்டும்.எனினும் அவர் திணைக்களத்தில் முன்னிலையாகவில்லை.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் பாணந்துறை மேல் நீதிமன்றத்திலும்' மொரட்டுவை நீதிமன்றத்திலும் அறிக்கை சமர்பித்தனர்.

இதன் போது அதிகாரிகள் மன்றில் சந்தேகநபர் பிணை நிபந்தனையை மீறியமை மற்றும் நீதிமன்றத்தை அவமதித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் அவரை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்தும் வகையில் பிடியாணை பிறப்பிக்குமாறும் நீதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தனர். இந்நிலையில் விடயங்களை ஆராய்ந்த மொரட்டுவ நீதிவான் நீதிமன்றம் இந்த வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைத்து உத்தரவு பிறப்பித்தது.

எனினும் பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி 'குடு சலிந்து' பிணை நிபந்தனை மீறியுள்ள மையால் அவரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக கடந்த 2020 ஆம் ஆண்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 'குடு சலிந்து' பிணையில்விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு தப்பி சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



# இஸ்ரேலியப் போர்க் குற்றவாளி இலங்கைக்கு சுற்றுலா வந்தாரா?

## விசாரிக்கக் கோருகின்றனர் 20 பேர்

வீடியோ ஒன்றில் பாலஸ்தீனியரின் உடலிற்கு அருகில் சிரித்தபடி காணப்பட்ட இஸ்ரேலிய படைவீரர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமை குறித்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என 20 இலங்கை பிரஜைகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து சட்டத்தரணியும் மனிதஉரிமை ஆர்வலருமான சுவஸ்திகா அருளிங்கம் தனது முகநூல் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

கடந்த வாரம் பெல்ஜியத்தை சேர்ந்த ஹிண்ட் ரஜாப் பவுண்டேசன் என்ற அமைப்பு பெரென்புக் என்ற இஸ்ரேலிய படைவீரர் இலங்கையில் உள்ளார் என தனது முகநூலில் குறிப்பிட்டிருந்தது.

சிலநாள்களின் முன்னர்; அந்த நபர் மற்றுமொரு இஸ்ரேலிய படைவீரருடன் இணைந்து உயிரிழந்த நபர் ஒருவரின் ( பாலஸ்தீனியர் ) உடலை பார்த்து எள்ளிநகையாடும் வீடியோ வெளியாகியிருந்தது என அந்த அமைப்பு தனது இணையத்தளத்தில் தெரிந்திருந்தது.

அந்தவீடியோவில் காணப்படும் மற்றையை நபர் கல்பெரென்புக்கினை இறந்து நிலையில் காணப்படும் நபரின் டேர்மினேட்டர் என அழைக்கின்றார்.

இருவரும் இறந்தவரின் உடலை பார்த்து எள்ளி நகையாடுவதை அவதானிக்க முடிகின்றது.

இது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சர்வதேச பொலிஸார் ஆகியோரிடம் முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்திருந்த ஹிண்ட் ரஜாப் அமைப்பு இலங்கை அதிகாரிகளிற்கும் இதுகுறித்து தெரியப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டிருந்தது.

இதன் பின்னர் உள்ளூர் ஊடகவியலாளர்கள் இந்த செய்தியை வெளியிட்டனர். இஸ்ரேலிய படைவீரர் என கருதப்படும் நபர் இலங்கையில் உள்ளமை குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

எனினும் ஹிண்ட் ரஜாப் அமைப்பு தெரிவித்துள்ளதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் எவையும் இல்லை என புத்திக குமாரசிங்க தெரிவித்தார்.

எனினும் இலங்கையில் உள்ள அராபிய பாலஸ்தீன ஆதரவு அமைப்புகளால் அடையாளம் காணப்பட்டுள்ள இஸ்ரேலிய படைவீரரை உடனடியாக நாடு திரும்பும்படி இஸ்ரேலிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என 20 ஆம் திகதி இஸ்ரேல் நஷனல் நியுஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

ஹிண்ட் ரஜாப் அமைப்பு தெரிவித்துள்ளது உண்மையா பொய்யா என்பதற்கு அப்பால் இது தார்மீக அரசியல் பாதுகாப்பு விவகாரம் என்பதால் இஸ்ரேலிய படைவீரர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்ற விவரத்தை பொதுமக்களிற்கு தெரியப்படுத்தவேண்டிய தேவை அரசாங்கத்திற் குள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நியமிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளி;ல் உள்ள ஏனைய அராபியர்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் இஸ்ரேலியர்களின் நடைமுறைகளை ஆராயும் விசேட குழுவில் இடம்பெற்றுள்ளதால் இது முக்கியமான விடயம்.

இஸ்ரேலின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் இனப்படுகொலையின் பண்புகளுடன் ஒத்துப்போகின்றது என அறிக்கையொன்று தெரிவிக் கின்றது.

இதனடிப்படையில் இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்து 20 பிரஜைகள் பொலிஸ்மா அதிபரிடம் கடிதமொன்றை ஒப்படைத்துள்ளதுடன் பாதுகாப்பு அமைச்சர் செயலாளர் சட்டமா அதிபர் சிஐடியின் இயக்குநர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

இலங்கையில் உள்ள இஸ்ரேலிய படைவீரர்களை அடையாளம் காணுமாறும் அவர்கள் இலங்கைக்குள் நுழைவதை தடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# புத்தளத்தில் கந்தூரி நிகழ்வு

(சியாஜ்)

அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீக பேரவையின் புத்தளம் மாவட்டத்தின் ஆறாம் கட்டையின் அம்பலம் கிளை ஏற்பாட்டில் 67 ஆவது முறையாக இடம்பெறும் 300 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த ஷைஹூ ஸிந்தா ஷாஹ் மதார் வலியுல்லாஹ் ரலியல்லாஹூ அன்ஹூ மற்றும் ஷைஹூ ஸிக்கந்தர் வலியுல்லாஹ் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களின் கந்தூரி நிகழ்வு புதன்கிழமை காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 01 மணிவரை இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் மௌலித், கஸீதா ஆகியவற்றோடு அல் ஆலீம் ஜவாஹிர் ஹூஸைன் (மன்பயீ, பாஸில், பாகவி) மற்றும் அஷ்பான் (கௌஸி, காதிரி) ஆகியோரின் விசேட பயான்களும் இடம்பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## எட்கா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு தீர்மானங்கள் தொடர்பிலும் வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தயார். 'எட்கா' மாத்திரமின்றி ஏனைய நாடுகளுடனும் பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தயாராகவுள்ளோம்.

நாட்டின் சமகாலத் தேவை மற்றும் மக்களின் விருப்பங்கள் என்பவற்றுக்கே முன்னுரிமையளிக்கப்படும். எவ்வாறிருப்பினும் வெளிநாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒரு சில அரசியல் குழுக்கள் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன. ஏதேனுமொருவகையில் நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்தடையச் செய்ய வேண்டும் என்பதே அவர்களது தேவையாகவுள்ளது.

மாறாக அவர்களுக்கு நாடு தொடர்பில் எவ்வித பிரச்சினையுமில்லை. அவர்களது தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காவே செயற்படுகின்றனர். எந்தவொரு நாட்டுடனும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தம் தொடர்பிலும் மக்களுக்கு வெளிப்படை தன்மையுடன் அறிவிக்கப்படும். அந்த வகையில் 'எட்கா' ஒப்பந்தம் தற்போதும் பேச்சு மட்டத்திலேயே உள்ளது. அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

## தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்றி தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஆதரவாக கனேடிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்த ஹரி ஆனந்தசங்கரிக்கும் அவர் தனது நன்றியை வெளிப்படுத்தினார். மேலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, மனித உரிமை மீறல்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன சார்ந்து அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அரசியல் நகர்வுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

## கிறிஸ்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## எதிர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாக புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளது. இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயம் சார்ந்த சமூகத்திற்கு நம்பகமான அடித்தளத்தை அமைத்தது. அன்று இயேசு நாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய நமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது.

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகவும் உள்ளது. இதன் அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும். இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்கு பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ளது. உண்மையில் ஒருசில அரசியல்வாதிகள் தங்களின் மருத்துவ சிகிச்சைக்காக 1 முதல் 10 இலட்சம் ரூபாய் வரையிலான நிதியை ஜனாதிபதி நிதியத்தில் இருந்துக் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் இலவச மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான சாத்தியம் காணப்பட்ட போதிலும் அரசியல்வாதிகளில் ஒரு சிலர் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பல கோடி ரூபாவை பெற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் நலன் கருதியே 1978ஆம் ஆண்டு ஜனாதிபதி நிதியம் உருவாக்கப்பட்டது. அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி பல கோடி ரூபாய் நிதி பெற்றுக்கொண்டுள்ளமை முற்றிலும் முறையற்றதொரு செயற்பாடாகும்.

ஒருசில அரசியல்வாதிகளின் தவறான செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளின் பெயருக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது. ஆகவே ஜனாதிபதி நிதியத்தில் இருந்து முறையற்ற வகையில் நிதி பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு அந்த நிதியை மீளப்பெறுவதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## இன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகால வேலைத்திட்டமாக இதனை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

'தூய சிறீலங்கா' என்ற வேலைத் திட்டம் அனைத்து இலங்கையர்களுக்குமானது. எனவே இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மதம் அல்லது இனங்களுக்கு முக்கியத்துமளிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இதற்கான குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. எனவே இந்த வேலைத்திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும். எனவே இந்த விடயத்தில் எதற்காக இனம் மற்றும் மதத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலைப்படுத்துகிறது என்பது எமக்கு தெரியாது.

நாடாளுமன்றத்தில் பிரதம கொறடாவாக சிறுபான்மை இனத்தவர் ஒருவரது பெயரை பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு ஆளும்தரப்பு மீது இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியும்? அக்கட்சிக்கு இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க தகுதியில்லபூ என்றார்.

## மகிந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிபதிகளுக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டமை முறையற்றதொரு செயற்பாடாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இன்று பாதுகாப்பு ஏதுமின்றி மக்கள் மத்தியில் செல்வதற்கான சூழலை மஹிந்த ராஜபக்சவே ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதை மறந்துவிடக்கூடாது.

படையினர் தமது சொந்த ஊர்களுக்குச் சவப்பெட்டியில் செல்லும் யுகத்தை மஹிந்த ராஜபக்சவே முடிவுக்கு கொண்டு வந்தார். ஆகவே அவருக்கு பாதுகாப்பு வழங்குவது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கும் உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையிலும் தரைப் படையினரின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும். இதனை அரசியல் பழிவாங்களாகவே குறிப்பிடவேண்டும்.

தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக கூறிக்கொண்டு ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்படுகிறது. அரச வரப்பிரசாதங்களை பயன்படுத்துவதில்லை என்று குறிப்பிட்ட ஆளும் தரப்பினர் அரச சிறப்புரிமைகளை முழுமையாக பயன்படுத்துகிறார்கள். நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் தரப்பினருடன் கூட்டணி அமைக்கப் போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போது எம்மைவிட்டுச் சென்றவர்கள் இன்று அரசியலில் இருந்து காணாமல் போயுள்ளார்கள். அடுத்த தேர்தலில் எந்தத் தரப்பில் இருந்து போட்டியிடுவது என்பது அவர்களுக்கு கேள்விக்குறியாகியுள்ளது. ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிடுவோம் என்றார்.

## கடன்மறுசீரமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது மேலும் தெரிவித்ததாவது:

கடனை மீளச் செலுத்த முடியாத நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மையில் மகிழ்ச்சிக்குரியவையாகும். 'மூடீஸ் ரேட்டிங்' நிறுவனத்தின் தரப்படுத்தலில் இலங்கை முன்னேற்றமடைந்துள்ளது.

ஆளும்தரப்புக் கடனை மீள செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டமையானது தனியார் துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் அதானி நிறுவனம்கூட அதன் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதிலிருந்து பின்வாங்கியது.

இப்போதும்கூட சர்வதேச சந்தையில் கடன் பெறக்கூடிய தரப்படுத்தலை நாம் அண்மிக்கவில்லை. அதற்கு 'மூடீஸ் ரேட்டிங்' தரப்படுத்தலில் இன்னொரு நிலைக்கு உயரவேண்டும்.

அந்த நிலைமையை அடைவதற்கு பொருளாதாரம் மேலும் பலப்படுத்தப்படவேண்டும். கடந்த ஆளும்தரப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களாலேயே இந்தப் பிரதி பலன் கிடைத்துள்ளது.

தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டதைப் போன்று கடந்த ஆளும்தரப்பால் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை இரத்து செய்து, கடன் மறுசீரமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டிருந்தால் இந்தப் பலனைப் பெற்றிருக்க முடியாது. அதற்காக அவர்கள் கூறியதைப் போன்று ஒப்பந்தம் மாற்றப்படவேண்டும் என்று நான் கூறவில்லை.

இதனைச் செய்யமுடியாது எனத் தெரிந்து கொண்டும், தேர்தலுக்கு முன்னர் மக்களிடம் பொய் கூறி அவர்களை தேசிய மக்கள் சக்தி ஏமாற்றியிருக்கிறது என்பதையே சுட்டிக்காட்டுகின்றேன். ஆனால் நாம் எதனை செய்ய முடியும், எதனை செய்ய முடியாது என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியின் ஒழுக்கம் இங்கு கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறது. தாம் பொய் கூறி மக்களை ஏமாற்றியிருக்கின்றோம் என்பது தேசிய மக்கள் சக்தியினரின் மனசாட்சிக்கு தெரியும்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அரிசி ஆலை உரிமையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் 10 நாட்களுக்குள் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

10 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால் இராணுவத்தினர் அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று ஒளிப்பதிவை நிறுத்திவிட்டு கூறினார். ஆனால் இதுவரை எதுவும் நடந்தபாடில்லை - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

### மாளிகைக்காட்டில்

# மனிதாபிமான உதவியாளர்கள் நடத்திய குருதிக்கொடை முகாம்

மாளிகைக்காடு மனிதாபிமானஉதவியாளர்களின் ஏற்பாட்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்தவைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததான முகாம் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனைஅஸ்ரப்ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிகழும் குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக முதலாவது தடவையாக நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் அதிகளவான பெண்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிகழ்வில்மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளரும், அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஸ்தாபக தலைவர் ஏ.எல். இம்தியாஸ், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர் குழாம், தாதிகள், உத்தியோகத்தர்கள், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், மாளிகைக்காடு மனிதாபிமான உதவியாளர்கள் அமைப்பின் நிர்வாகிகள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர், செயலாளர் எனப்பலரும்கலந்துகொண்டனர்.



# இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 17 இந்திய மீனவர்கள் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 17 இந்திய மீனவர்கள் நேற்;று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இரண்டு படகுகளுடன் இவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2024இல் வெளியிடப்பெற்றது